| | கேள்வி | பதில் |
|---|---|---|
| A) | நபிகளார் சுப்ஹு (சுன்னத்) தொழுகையில் இந்த வசனத்தை ஒதக்கூடியவர்களாக இருந்தார்கள். அது எந்த வசனம் என்ன? | இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறியதாவது:<br>அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் ஃபஜ்ருடைய (சுன்னத்) இரண்டு ரக்அத்களில் (முதல் ரக்அத்தில் அல்பகரா அத்தியாயத்திலுள்ள) "கூலூ ஆமன்னா பில்லாஹி வ மா உன்ஸில இலைனா..."(என்று தொடங்கும் 2:136ஆவது) வசனத்தையும், (இரண்டாவது ரக்அத்தில்) "ஆலு இம்ரான்" அத்தியாயத்திலுள்ள "தஆலவ் இலா கலிமதின் சவாயிம் பைனனா வ பைனக்கும்..." (என்று தொடங்கும் 3:64ஆவது) வசனத்தையும் ஓதுவார்கள்.<br>(முஸ்லிம் 1318). |
| B) | இவர்தான் இச்சமுதாயத்தின் நம்பிக்கைக்கு உரியவர் (هَذَا أَمِينُ هَذِهِ الأُمَّةِ) என்ற அங்கீகாரம் பெற்ற நபித்தோழர் யார்? | அபூ உபைதா பின் ஜர்ராஹ் (عُبَيْدَةَ بْنَ الْجَرَّاحِ)<br>புஹாரி : 4380 |
| C) | | 1) உங்களில் அவரது(நபிகளார்) குலம் எத்தகையது?<br>பதில்: அவர்(நபிகளார்) எங்களில் சிறந்த குலத்தைச் சார்ந்தவர் |

| | | |
|---|---|---|
| | | 2) இவருக்கு முன்னர் உங்களில் யாரேனும் எப்போதாவது இந்த வாதத்தைச் செய்ததுண்டா?<br>பதில்: இல்லை |
| | | 3) இவரது முன்னோர்களில் எவரேனும் மன்னர்களாக இருந்திருக்கிறார்களா?<br>பதில்: இல்லை |
| | | 4) அவரைப் பின்பற்றுவோர் மக்களில் சிறப்பு வாய்ந்தவர்களா? அல்லது சாமானியர்களா?<br>பதில்: சாமானியர்கள் தாம் |
| | | 5) அவரைப் பின்பற்றுவோர் அதிகரிக்கின்றனரா? அல்லது குறைகின்றனரா?<br>பதில்:அவர்கள் அதிகரித்துச் செல்கின்றனர் |
| | ஹெர்குலிஸ் (ரோமபுரி மன்னர்) & அபூ சுஃப்யானிடம் நபிகளாரை பற்றி கேட்ட கேள்வியும் அதற்கு அவர்கள் அளித்த பதிலையும் மட்டும் எழுதவும் (முழு ஹதீஸையும் அனுப்ப வேண்டாம்) | 6) அவரது மார்க்கத்தில் நுழைந்த பின் அதன் மீது அதிருப்தியுற்று யாரேனும் மதம் மாறியிருக்கின்றனரா?<br>பதில்: இல்லை |
| | | 7) அவர் இவ்வாறு வாதிப்பதற்கு முன் அவர் பொய் சொல்லக் கூடியவர் என்று எப்போதாவது நீங்கள் சந்தேகித்ததுண்டா?<br>பதில்: இல்லை |

| | | |
|---|---|---|
| | | 6) அவர் வாக்கு மீறியது உண்டா?<br><br>பதில்: இல்லை |
| | | 7) அவருடன் நீங்கள் போரிட்டிருக்கிறீர்களா ?<br><br>பதில்: ஆம் |
| | | 8) அவருடன் நீங்கள் நடத்திய போரின் முடிவுகள் எவ்வாறிருந்தன?<br><br>பதில்: எங்களுக்கும் அவருக்குமிடையே வெற்றியும் தோல்வியும் மாறி மாறி வந்திருக்கின்றன. சில சமயம் அவர் எங்களை வென்றிருக்கிறார்; சில சமயம் நாங்கள் அவரை வென்றிருக்கிறோம் |
| | | 9) அவர் உங்களுக்கு என்ன தான் போதிக்கிறார் ?<br><br>பதில்: அல்லாஹ் ஒருவனையே வணங்குங்கள்; அவனுக்கு எதனையும் இணையாக்காதீர்கள்; உங்கள் முன்னோர்கள் கூறி வந்தவற்றையெல்லாம் விட்டு விடுங்கள்" என்கிறார். தொழுகை, உண்மை, கற்பு நெறி, உறவினர்களுடன் இணங்கி இருத்தல் போன்ற பண்புகளை எங்களுக்கு ஏவுகிறார் |